# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 02 செவ்வாய்க்கிழமை 17.12.2024 கதிர் 83







## கொரோனாப் பெருந்தொற்றின் போது

# இறந்த முஸ்லீம்களைத் தகனம் செய்தமை தன் இனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதி!

### – நாடாளுமன்றத்தில் ஹக்கீம் முழக்கம் –



**"முன்னைய அரசாங்கங்கள் முஸ்லீம் மக்களுக்குப் பெரும் அநீதியை இழைத்துள்ளன. ஆகக் குறைந்தது துறைசார் விசாரணையாவது மேற்கொள்ளப்பட்டு, அந்த நபர்கள் தண்டிக்கப்பட வேண்டும்" என்று குறிப்பிட்ட இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்,**

கடத்த அரசாங்கத்தின் தவறுகளை திருத்திக் கொள்வதற்காகவே புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய அவர், கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் தகனம் செய்யப்பட்ட தனிநபர்கள், குறிப்பாக முஸ்லிம் நோயாளிகளின் விவரங்களை வெளியிடவும், அவற்றைப் பேணிப் பராமரிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மேலும், "தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பின்னால் ஒளிந்து கொள்ளாதீர்கள். கோவிட்-19 நோயால் இறந்த மற்றும் தகனம் செய்யப்பட்ட முஸ்லீம் நோயாளிகளின் விவரங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இது வெளிப்படையாக விவாதிக்கப்பட வேண்டும்" என்று குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், தகவல்களை மறைக்கும் செயற்பாடு நாட்டின் சுகாதார அதிகாரிகளுக்கு களங்கம் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் கேள்விக்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர் மருத்துவர் நலிந்த ஜயதிஸ்ஸ, "அரசாங்கம் எந்த வகையிலும் தகவல்களை மறைக்க முயற்சிக்கவில்லை. இது தகவல்களை மறைக்கும் பிரச்சினை அல்ல் இது மருத்துவ

6 ►

## எலிக் காய்ச்சலால் 99 பேர் பாதிப்பு!




(யாழ்ப்பாணம், டிச 17)

யாழ். மாவட்டத்தில் இதுவரை எலிக்காய்ச்சல் காரணமாக 99 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் பரவல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 23 பேரும், யாழ். போதனா வைத்தியசாலையில் 6 பேரும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கடந்த 24 மணிநேரத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 9 நோயாளர்களும், யாழ். போதனா வைத்தியசாலையில் 5 நோயாளர்களும் எலிக்காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணிநேரத்தில் இந்நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் பதிவாகவில்லை. இதுவரை யாழ் மாவட்டத்தில் இந்நோய் காரணமாக 7 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எலிக்காய்ச்சல் நோய் வராமல்தடுப்பதற்காக தடுப்பு மருந்து வழங்கும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

6 ►

## அர்ச்சுனாவைத் தகுதிநீக்கம் செய்யக்கோரி "கியோ வொரண்டோ" நீதிப் பேராணை மனு!



(கொழும்பு, டிச. 17)

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவர் அர்ச்சுனா இராமநாதனின் நாடாளுமன்றத் தெரிவைச் சவாலுக்கு உட்படுத்தி, அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வறிதாக்கப்பட வேண்டும் எனக்கோரி "கியோ வொரண்டோ" நீதிப் பேராணை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஓஷல ஹேரத் என்பவரால் இன்று மேன்மைறையீட்டு நீதிமன்றத்தில் இந்த நீதிப் பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவர் இ. அர்ச்சுனா தனது மருத்துவ அதிகாரி பதவியில் இருந்து விலகாமல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்வதற்குத் தகுதி அற்றவர் எனத் தெரிவித்துள்ள மனுதாரர், நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவர் இ. அர்ச்சுனா தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும் எனக் கோரயுள்ளார்.

இன்று காலை இந்த மனு வசாரணைக்கு வந்த போது, எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி சமர்ப்பணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டது. மனுதாரர் சார்பில் ஷெனால் பெர்ணாணடோ மற்றும் என். கே. அஷோக்பரன் ஆகியார் முன்னிலையாகினர். (ஐ-05)

## மருத்துவர் ஜகத் விக்ரமரத்ன புதிய சபாநாயகராகத் தெரிவு!



(கொழும்பு, டிச. 17)

இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராக தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ஜகத் விக்ரமரத்ன தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது மருத்துவர் ஜகத் விக்ரமரத்னவை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய முன்மொழிய, அவைத்த்தலைவரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க வழிமொழுந்தார்.

புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மருத்துவர் ஜகத் விக்ரமரத்ன, கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது பொலன்நறுவ மாவட்டத்தில் போட்டுயிட்டு விருப்பு வாக்கு எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தைப்பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்.

பேராதனைப் பல்கலைக்கழக மருத்து பீடத்திலிருந்து மருத்துவராக வெளியேறிய ஜகத் விக்ரமரத்ன, கொலம்பியப் பல்கலைக்கழகத்தில் சுகநல தர நிர்ணயம் மற்றும் நோயாளர் பாதுகாப்புத் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமாவையும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவ நிர்வாகத்தில் முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்தையும் பெற்றவராவார்.

10வது நாடாளுமன்றத்தின் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட அசோக ரங்வல கடந்த 13ஆம் திகதி தனது பதவியை ராஜினாமாச் செய்ததையடுத்து புதிய சபாநாயகர் பதவிக்கான தெரிவு இன்று காலை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும் . (ஐ-05)

# சீனாவின் பெண்கள் குழு பிரதமருடன் சந்திப்பு!





(கொழும்பு, டிச. 17)

அனைத்து சீன பெண்கள் சம்மேளனத்தின் துணைத் தலைவி சாங் டோங்மேய், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவைச் சந்தித்து, பெண்கள் வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பரஸ்பர முயற்சிகள் குறித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு, நேற்று 16 ஆம் திகதி, திங்கட்கிழமை பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

அனைத்து சீன பெண்கள் சம்மேளனத் துணைத் தலைவி சாங் டோங்மேய் தலைமையிலான தூதுக்குழுவினரை வரவேற்ற பிரதமர் கலாநிதி அமரசூரிய, இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீடித்த நட்புறவு பற்றி விளக்கினார்.

பெண்களின் கல்வி , சுகாதாரம் மற்றும் பொருளாதாரப் பங்கேற்பு ஆகியவற்றில் பகிரப்பட்ட சவால்கள் மற்றும் வாய்ப்புகளை மையமாகக் கொண்டிருந்த இந்தச் சந்திப்பில், பெண்களின் தொழிற்படை ஈடுபாடு மற்றும் கீழ்மட்ட பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது உட்பட சீனாவின் முன்னேற்றங்கள் குறித்து அனைத்து சீன பெண்கள் சம்மேளனத் துணைத் தலைவி சாங் டோங்மேய் விளக்கினார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவர் உட்பட இலங்கை சீனத் தூதரகத்தின் உயர் அதிகாரிகளும், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த, வெளியுறவு அமைச்சின் கிழக்கு ஆசியாவுக்கான பணிப்பாளர் நாயகம் ருவந்தி தெல்பிட்டிய மற்றும் கிழக்கு ஆசியப் பிரிவின் பணிப்பாளர் உதானி குணவர்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ-05)

## ஞானசாரர் கைவசம் இருக்கும் முக்கிய தகவல்கள்!
## அநுரவிடம் வாய்ப்பு கோருகிறார்

கொழும்பு , டிச. 17

நாட்டில் அதிகரித்து வரும் இனவெறி மற்றும் மத வெறி குறித்து தாம் சேகரித்துள்ள முக்கியமான தகவல்களைப் பெற்று விவாதிக்க ஒரு முறையான நிறுவனத்தை நிறுவுமாறு பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்(புயடயபழனய யுவாவாந புயெயெளயசய வூநசழ), ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்கள் மத்தியில் நேற்று உரையாற்றிய ஞானசார தேரர், குற்றப் புலனாய்வுத் துறையிடம் இல்லாத தகவல்கள்கூட தன்னிடம் இருப்பதாகக் கூறியுள்ளார்.

எனினும், இந்தத் தகவல்களை தாம் வைத்திருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. தாம் இந்த அரசாங்கத்தை நம்புவதால், அவற்றை அரசாங்கத்தால் நிறுவப்பட்ட ஒரு உண்மையான நிறுவனத்திடம் ஒப்படைக்க விரும்புவதாக தேரர் குறிப்பிட்டுள்ளார்.

மகா சங்கத்தினராக, பண்டைய காலங்களிலிருந்து நாட்டையும் தேசத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு தங்களுக்கு உள்ளது. கடந்த காலங்களிலும் தாங்கள் அந்த கடமைகளை செய்தபோதும், துரதிஸ்டவசமாக, எவரும் தங்களின் பேச்சைக் கேட்கவில்லை. அதற்கு பதிலாக, நாட்டில் இனவெறியை உருவாக்கியவர்கள் போல தாம் நடத்தப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை இனவெறி மற்றும் மத சகிப்பின்மை இல்லாத சூழலை உருவாக்க இப்போது நாடு ஒரு நல்ல வாய்ப்பைப் பெற்றுள்ளது என்று குறிப்பிட்டுள்ள ஞானசாரர், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இந்தியாவுக்குச் செல்வதற்கு முன்னர் சில மதிப்புமிக்க கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார் என்று தெரிவித்துள்ளார். தனது உரையில், எந்தவொரு இனவெறி நடவடிக்கைகளையும் அனுமதிக்கப்போவதில்லை என்று அவர் கூறியுள்ளார். எனவே இந்த வாக்குறுதியை தாம் மரியாதையுடனும் ஒப்புதலுடனும் முழுமையாக ஆதரிப்பதாக குறிப்பிட்டுள்ளார். பல வருட இனவெறி மற்றும் பிரிவினைவாதத்தால் இலங்கை தேசம் சோர்வடைந்துள்ளது என்றும் தேரர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

(ஐ)



## நாடாளுமன்றத் தேர்தல் - 2024
## வேட்பாளர்களின் வரவு – செலவு விவரங்கள் இன்று முதல் பொது வெளியில் பகிரங்கமாக

(கொழும்பு, டிச. 17)

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்கள், கட்சிகளின் செயலாளர்கள், சுயேச்சைக் குழுத் தலைவர்கள் மற்றும் தேசியப் பட்டியல் வேட்பாளர்களின் வருமானம் மற்றும் செலவு விவரங்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் பகிரங்கமாகக் காட்சிப்படுத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வேட்பாளர்களின் வருமானம் மற்றும் செலவு அறிக்கைகள் அனைத்து மாவட்டச் செயலகங்களிலும், ராஜகிரியவில் உள்ள தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறைச் சட்டத்தின் படி, நாடாளுமன்றத் தேர்தலுக்கான வருமானம் மற்றும் செலவு அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் கடந்த 6ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைந்தது.

அந்த காலப்பகுதியினுள், மாவட்ட மட்டத்தில் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 8 ஆயிரத்து 361 வேட்பாளர்களில் 7 ஆயிரத்து 412 பேர் வருமானம் மற்றும் செலவு விவரங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

சுயேச்சைக் குழுக்களில் போட்டியிட்ட 690 வேட்பாளர்களில் 493 பேர் வருமானம் மற்றும் செலவு விவரங்களைச் சமர்ப்பித்துள்ளதாகவும், 527 தேசிய பட்டியல் வேட்பாளர்களில் 434 பேர் தங்களது வருமானம் மற்றும் செலவு விவரங்களைச் சமர்ப்பித்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வருமானம் மற்றும் செலவு விவரங்களைச் சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

(ஐ - 09)

## கூலருடன் மோதிய யானை!



(வவுனியா, டிச 17)

செட்டிகுளம் - மன்னார் வீதியில் கூலர் வாகனத்துடன் மோதுண்ட யானை ஒன்று காயமடைந்த நிலையில் வீதியருகில் வீழ்ந்து கிடக்கின்றது.

இன்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, செட்டிகுளம் - மன்னார் வீதியில் உள்ள பெரியகட்டுப் பகுதியில் வீதியில் நின்ற யானை ஒன்றுடன் மன்னாரில் இருந்து மதவாச்சி நோக்கி மீன்களை ஏற்றிக்கொண்டு அந்த வீதியால் வந்த கூலர் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. கூலர் வாகனம் கடுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் அதில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த யானை வீதியோரத்தில் உள்ள நீர் உள்ள குழி ஒன்றில் காயத்துடன் வீழ்ந்து கிடந்து உயிருக்குப் போராடுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குப் பொதுமக்களால் தகவல் வழங்கப்பட்டதையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தால் யானைக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-04)

# அனுர ஆட்சி இழப்பது உறுதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித்!



கொழும்பு , டிச. 17

அநுர அரசு ஒரு வருடத்துக்குள் ஆட்சியை இழப்பது உறுதி என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

போலி வாக்குறுதிகளை வழங்கி போலிக் கல்வித் தகைமைகளுடன் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசு, ஒரு மாதத்துக்குள் சபாநாயகரை இழந்துள்ளது.

அதியுயர் சபையில் போலிக் கலாநிதிப் பட்டத்துடன் சபாநாயகர் கதிரை அலங்கரித்தவர், ஒரு மாதத்துக்குள் உண்மை நிலைமை வெளியில் தெரியவர பதவியில் இருந்து விலகியுள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்கள் இனியாவது விழிப்படைய வேண்டும். ஒரு மாதத்துக்குள் சபாநாயகரை இழந்த அரசு, ஒரு வருடத்துக்குள் ஆட்சியை இழப்பது உறுதி. ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி விரைவில் மலரும் என தெரிவித்துள்ளார்.

(ஐ)

# அர்ச்சுனாவிற்கு எதிராக திரும்பிய அவரின் சகா!

யாழ்ப்பாணம் , டிச. 17

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் கேள்விகளை அவருடன் சுயேட்சைக் குழு 17 சார்பாக தேர்தலில் போட்டியிட்ட சிவப்பிரகாசம் மயூரன் விமர்சித்துள்ளார்.

தனது முகநூல் கணக்கில் இட்ட பதிவொன்றின் மூலம் அவர் இந்த விடயம் தொடர்பாக விளக்கமளித்துள்ளார். கேள்விகள் கேட்கும்போது விடயத்தை விளங்கி கேள்விகளை கேட்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் அனைத்தும் 2024இல் தொடக்கி 2024இல் முடியும் என்றில்லை. சில திட்டங்கள் ஒரு வருடம் கடந்தும் செல்லலாம்.

அதற்காக அத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி பின்வாங்கப்படும் என்றில்லை.

அந்தந்த திட்டங்கள் நிறைவு செய்யப்படும் பொழுது அவற்றுக்கான மீதி செலவுகள் கணக்கறிக்கையிடப்பட்டு ஏற்கனவே 2024 பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து வழங்கப்படும்” எனக் கூறியுள்ளார். (ஐ)

# இலங்கை இந்திய ஜனாதிபதிகள் கலந்துரையாடல்

கொழும்பு , டிச. 17

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும்(யுரெசய முரஅயசய னுளைளயயெலயமய) இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கும்(னுசயரியனை ஆரசஅர) இடையிலான சந்திப்பு நேற்று மாலை புதுடில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் நடைபெற்றது.


இந்தச் சந்திப்பின்போது, இந்திய - இலங்கை இடையிலான நீண்டகால நட்புறவை வலுப்படுத்துவது மற்றும் பிராந்திய பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்து கருத்துப் பரிமாறப்பட்டது.


சிநேகபூர்வ சந்திப்பின் பின்னர் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இராப்போசன விருந்து வழங்கினார்.

நீண்ட கால நட்புறவை வலுப்படுத்துவது தொடர்பில் இலங்கை இந்திய ஜனாதிபதிகள் கலந்துரையாடல் ; “சநளனைநவெ யுரெசய ஏளைவைள ஐனெயை

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோரும் இந்தச் சந்திப்பில் இணைந்து கொண்டனர். (ஐ)

# கடற்கரையில் கரையொதுங்கிய திமிங்கலம்!





கொழும்பு , டிச. 17

கொழும்பு - பம்பலப்பிட்டி கடற்கரையில் வகையான இறந்த திமிங்கலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

பம்பலப்பிட்டி புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள கடற்கரையில் திமிங்கலம் கரை ஒதுங்கியுள்ளதாக எமது செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கடற்பரப்பில் நேற்று இரவு பல திமிங்கலங்கள் சுற்றித் திரிந்ததாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

# யாழில் எலிக்காய்ச்சல் நோயாளிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பு



யாழ்ப்பாணம் , டிச. 17

யாழ்.மாவட்டத்தில் எலிக் காய்ச்சலினால் 85 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று அவரால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 21 பேரும் யாழ் போதனா வைத்தியசாலையில் 11 பேரும் இந்நோய்க்காகச் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கடந்த 24 மணிநேரத்தில் புதிதாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு 9 நோயாளர்களும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு 4 நோயாளர்களும் எலிக்காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சனிக்கிழமை இரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் துன்னாலை கிராமத்தைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் ஒருவர் எலிக்காய்ச்சல் நோய் காரணமாக உயிரிழந்துள்ளார்.

அத்துடன் இதுவரை யாழ் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் காரணமாக 7 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எலிக்காய்ச்சல் எனச் சந்தேகிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்களின் குருதி மாதிரிகள் கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கும், கண்டி தேசிய வைத்தியசாலைக்கும் அனுப்பப்பட்டிருந்தன.

இவர்களில் 7 பேருக்கு எலிக்காய்ச்சல் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

மேலும், எலிக்காய்ச்சல் அபாயம் மீண்டும் தீவிரம் பெற்று வரும் நிலையில் கள உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

(ஐ)

# இரட்டை இலை சின்னம் விவகாரம்தொடர்பில் டெல்லி உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு!

அ.தி.மு.க.வுக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து டெல்லி உயர் நீதிமன்றத்தில் புகழேந்தி சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனை விசாரித்த உயர்நீதிமன்றம் புகழேந்தியிடம் புதிதாக ஒரு மனுவை பெற்று உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தி இருந்தது. இது தொடர்பாக புகழேந்தயின் மனு மீது தேர்தல் ஆணையம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனையடுத்து தேர்தல் ஆணையம் மற்றும் தலைமை தேர்தல் ஆணையர்கள் ஜானேஷ்குார், சுக்பீர் சிங் சாந்து ஆகியோருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணை இன்று டெல்லி உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றது. அப்போது இரட்டை இலை சின்னம் விவகாரத்தில் புகழேந்தி அளித்துள்ள மனு மீது விசாரணை நடத்தி விரைந்து தீர்வு காண வேண்டும் என்று அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது.

மேலும் புகழேந்தியின் நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் முடித்து வைத்து டெல்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.







# மணிப்பூர் முதல்–மந்திரி வீடு அருகே மீட்கப்பட்ட வெடிகுண்டு!



மணிப்பூர் மாநிலத்தில் குக்கி மற்றும் மைதேயி சமூகங்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் கடந்த ஆண்டு மே மாதம் கலவரமாக வெடித்தது. அம்மாநிலத்தில் ஒரு ஆண்டுக்கு மேலாக வன்முறை நீடித்து வரும் நிலையில் சமீபத்தில் மீண்டும் கலவர சம்பவங்கள் அதிகரித்து உள்ளன.

இந்த நிலையில் மணிப்பூர் முதல்-மந்திரி பிரேன் சிங்கின் வீடு அருகே வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மணிப்பூரின் லுவாங்ஷாங்பாம் பகுதியில் முதல்-மந்திரி வீடு அருகே வெடிக்காத மோட்டார் வெடிகுண்டு ஒன்று பொலிஸாரால் கண்ண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு ராக்கெட் மூலம் வெடிகுண்டு வீசப்பட்டதாகவும், ஆனால் அது வெடிக்கவில்லை என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். வெடிகுண்டு கண்டெடுக்கப்பட்டதையடுத்து அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது . இதுதொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# “இந்தியா ஜனநாயகத்தின் தாய்”

## மத்திய மந்திரி ஜே.பி.நட்டா தெரிவிப்பு!



அரசியல் சாசனம் ஏற்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு அடைந்ததையொட்டி பாராளுமன்றத்தில் சிறப்பு விவாதம் நடைபெற்று வருகிறது.

பாராளுமன்ற மக்களவையில் கடந்த 14 மற்றும் 15-ந் திகதீயில் விவாதம் நடைபெற்று முடிந்த நிலையில் மேல்சபையில் நேற்று விவாதம் தொடங்கியது. மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் விவாதத்தை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

அதைத்தொடர்ந்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உரையாற்றினார்.

மேல் சபையில் இன்று 2-வது நாள் விவாதத்தில் மத்திய மந்திரி ஜே.பி.நட்டா கூறியதாவது “நாம் கொண்டாடும் இந்த விழா, அரசியலமைப்பின் மீதான நமது அர்ப்பணிப்பை, வலுப்படுத்துகிறது. தேசிய இலக்கை நிறைவேற்ற இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்துவோம் என்று நான் நம்புகிறேன்.

இந்தியா மிகப்பெரிய ஜனநாயக நாடு என்பதை நாம் அனைவரும் அறிவோம். இது மிகப்பெரிய ஜனநாயகம் மட்டுமல்ல, ஜன நாயகத்தின் தாய் என்றும் நமது பிரதமர் கூறினார்.

நமது அரசியலமைப்பை வடிவமைத்த அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களுக்கு நாடு கடமைப்பட்டுள்ளது. இந்திய நெறிமுறைகளின் படி ஜனநாயகம் என்பது சுதந்திரம், ஏற்றுக் கொள்ளுதல், சமத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கியது. குடிமக்கள் கண்ணியமான வாழ்க்கை நடத்த அனுமதிக்கிறது.

370-வது சட்ட பிரிவை காங்கிரஸ் தவறுதலாக பயன்படுத்தியது. அவசர கால நிலையில் பலரும் குறி வைக்கப்பட்டனர். இவ்வாறு ஜே.பி.நட்டா தனது உரையில் கூறினார்.

# ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவை கூட்டுக்குழுவுக்கு அனுப்ப அமித்ஷா பரிந்துரை

இந்தியாவில் மக்களவை தேர்தலுடன் அனைத்து மாநிலங்களின் சட்டசபை தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்த மத்திய அரசு தீர்மானித்துள்ளது. இதற்காக ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்தை முன்மொழிந்தது.

மக்களவையின் 543 தொகுதிகள், மாநிலங்களின் 4,120 சட்டப்பேரவைத் தொகுதிகள், 30 லட்சத்துக்கும் மேற்பட்ட உள்ளாட்சிப் பதவிகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தச் சாத்தியக்கூறுகள் உள்ளனவா? என ஆராய முன்னாள் ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த் தலைமையில் ஒரு குழு அமைத்தது. இந்த குழு ஒரு நாடு ஒரே தேர்தல் நடத்துவது தொடர்பான அறிக்கையைத் தாக்கல் செய்தது. இதற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்நிலையில் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவை இன்று ஜடிசம்பர் 17ஸ மக்களவையில் சட்டத்துறை அமைச்சர் அர்ஜ/ன்ராம் மேக்வால் தாக்கல் செய்தார். இதற்கு எதிர்க்கட்சி எம்.பிக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி, திரிணாமுல் காங்கிரஸ், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் தெலுங்கு தேசம் கட்சி நிபந்தனையற்ற ஆதரவு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, மசோதா மீதான வாக்கெடுப்பு மக்களவையில் நடத்தப்பட்டது. இதையடுத்து, மசோதாவை பாராளுமன்ற கூட்டுக்குழுவிற்கு அனுப்ப பரிந்துரை செய்வதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்தார். இதன்போது கூட்டுக்குழு பரிசீலனையின் போது அனைத்துக் கட்சிகளும் விரிவாக கருத்து கூறலாம் என்றும் அமித்ஷா தெரிவித்துள்ளார்.



# அமெரிக்காவில் தனியார் பள்ளியில் துப்பாக்கிச்சூடு – மூவர் பலி!



அமெரிக்காவில் சமீப காலமாக துப்பாக்கி கலாச்சாரம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, பாடசாலைகளில் நடைபெறும் துப்பாக்கி சூடு சம்பவங்கள் அமெரிக்க மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணம் மெடிசன் பகுதியில் தனியார் பாடசாலை ஒன்றில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் மாணவன் உட்பட 3 பேர் உயிரிழந்துள்ளதோடு மேலும் 9 பேர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கி சூடு நடத்தியதாக சந்தேகிக்கப்படும் சிறுவனும் அந்த துப்பாக்கி சூட்டில் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. குறித்த சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதி பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இந்த ஆண்டில் இதுவரை 385 துப்பாக்கி சூடு சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளமை குரிப்பிடத்தக்கது.

## கருத்து வேறுபாடு காரணமாக பதவி விலகினார் கனடா துணை பிரதமர்!



கனடா நாட்டின் துணை பிரதமர் மற்றும் அந்நாட்டின் நிதியமைச்சரான கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். அந்நாட்டின் வருடாந்திர நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு சில மணி நேரங்களுக்கு முன் தனது பதவியை ராஜினாமா செய்வதாக கிறிஸ்டியா அறிவித்துள்ளார்.

இந்நிலையில் துணை பிரதமர் மற்றும் நிதியமைச்சர் என இரு பதவிகளில் இருந்தும் பதவி விலகியுள்ள கிறிஸ்டியா, பிரதமர் ஜஸ்டின் ட்ஷரூடோ தலைமையிலான அமைச்சரவையில் அவருக்கு எதிரான கருத்து வேறுபாட்டை முதல் முறையாக பொது வெளியில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

சமீபத்தில் கனடாவை சேர்ந்த ஒவ்வொருவருக்கும் 250 கனடா டாலர்களை காசோலையாக வழங்குவதற்கான கொள்கை தொடர்பாக பிரதமர் ட்ஷரூடோ மற்றும் துணை பிரதமராக இருந்த கிறிஸ்டியா இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் நீண்ட காலமாக ட்ஷரூடோவின் லிபரல் கட்சியில் மிக முக்கிய தலைவராக இருந்து வருகிறார். 2020 ஆம் ஆண்டில் இருந்து கனடா நாட்டின் நிதியமைச்சராகவும் கிறிஸ்டியா பதவியில் இருந்து வந்தார். இந்த நிலையில், துணை பிரதமர் மற்றும் நிதியமைச்சர் ஆகிய பதவிகளில் இருந்து விலகியுள்ள கிறிஸ்டியா கனடாவின் நிதி வருவாயை கையிருப்பில் வைத்திருக்க அறிவுறுத்தி இருக்கிறார்.

தனது பதவி விலகல் கடிதத்தில் டிரம்ப்-இன் அச்சுறுத்தல் மிகப்பெரிய சவாலாக இருக்கும் என்று கிறிஸ்டியா குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்டியா தொடர்ந்து லிபரல் உறுப்பினராக அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தொடர்ந்து இருக்க வரும்புவதாக தெரிவித்துள்ளார். மேலும், வரவருக்கும் கனடா தேர்தலில் அவர் மீண்டும் போட்டியிடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இறக்குமதி செய்யப்படும் கனடா நாட்டு பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபராக பொறுப்பேற்க இருக்கும் டொனால்டு டிரம்ப் தெரிவித்து இருக்கிறார். இது கனடாவின் பொருளாதாரத்தை பாதிக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## மாரத்தான் ஓட்டத்தில் பாரம்பரிய உடையில் ஓடி சாதனை படைத்த தமிழக தம்பதியினர்!





அபுதாபியில் தேசிய எண்ணெய் நிறுவனத்தின் சார்பில் மாரத்தான் தொடர் ஓட்ட போட்டி, கிங் அப்துல்அஜீஸ் அல் சவுத் சாலையில் உள்ள நிறுவனத்தின் தலைமையகத்தில் தொடங்கியது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டிருந்தனர். பல பிரிவுகளில் நடந்த இந்த நீண்ட தொலைவு ஓட்டப்போட்டியில் அமீரகத்தில் வசிக்கும் தமிழகத்தின் நாகர்கோவிலைச் சேர்ந்த லிடியா ஸ்டாலின் மற்றும் விபின் தாஸ் தம்பதியினர் கலந்து கொண்டு உற்சாகமாக ஓடினர்.

மாரத்தான் ஓட்டம் என்றாலே டிசர்ட் - கால்சட்டை அணிந்து ஓடுவது தான் வழக்கம். ஆனால் இவர்கள் வழக்கமான தடகள வீரர்கள் அணியும் உடைகளை தவிர்த்துதமிழகத்தின்பாரம்பரியஉடையான வேட்டி-சட்டை மற்றும்பாவாடை-தாவணி அணிந்து ஓடி பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளனர். மொத்தம் 42.2 கிலோ மீட்டர் தொலைவை பாரம்பரிய உடை அணிந்து 4 மணி நேரத்தில் நிறைவு செய்து சாதனை புரிந்தனர். முடிவில் நிறுவனத்தின் சார்பில் தம்பதியினருக்கு பதக்கம் மற்றும் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இது குறித்து லிடியா ஸ்டாலின் தினத்தந்தி செய்தியாளரிடம் கூறுகையில், "தற்காலத்தில் இதுபோன்ற ஓட்டப் போட்டிகளில் பொது நிகழ்வுகளில் பங்கேற்பவர்கள் தங்கள் பாரம்பரியங்களை மறந்து மேற்கத்தேய கலாச்சாரத்தி லான உடையை அணிந்து கலந்துகொள் கின்றனர்.

எனவே நமது தமிழக பாரம்பரி யத்தை வலியுறுத்தும் வகையில் நீண்ட தொலைவானாலும் நமது பாரம்பரிய உடை அணிந்தபடி ஓடினோம்" என்று தெரிவித்தார்.

## வானுவாட்டு தீவில் பதிவான சக்திவாய்ந்த நிலநடுக்கம்!




பசிபிக் பெருங்கடலின் தெற்கே ஓசியானியாப் பகுதியில் அமைந்துள்ள வானுவாட்டு தீவில் 7.3 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளது. இதனால் அச்சம் அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர்.

இந்த நிலநடுக்கமானது போர்ட்- விலாவிற்கு மேற்கே 30 கி.மீ. தொலைவில் 43 கி.மீ ஆழத்தில் தாக்கி உள்ளது. இதனால் வானுவாட்டு தீவை சுற்றியுள்ள தீவுகள் மற்றும் நியூசிலாந்துக்கு சுனாமி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

### இறந்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒழுக்க நெறிமுறைகள் பற்றியது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், நோயாளியின் விவரங்களை வெளியிடுவது அனு-மதிக்கப்படாது, மேலும் இந்தத் தகவலை மறைக்க எங்களுக்கு உரிமை இல்லை.

விஞ்ஞான ரீதியாக எந்தவித அடிப்படையுமில்லா-மல் அப்போதைய அரசாங்கமும், அமைச்சரவையும் முடிவுகளை எடுத்ததிருந்தன என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்" என்றும் சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

அமைச்சரின் விளக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த ஹக்கீம், "இது எப்படி ஒரு நெறிமுறை பிரச்சினை ஆகும்? இது கடந்த அரசாங்கத்தின் தவறு என்பது தான் உண்மை" என்றார்.

கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் கொவ-ிட்-19 காரணமாக இறந்தவர்களின் உடலைத் தகனம் செய்யும் முன்னைய அரசாங்கத்தின் தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்னார்.

அந்த நேரத்தில் திரும்பவும் பதிலளித்த சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ "எந்தவொரு தகவ-லையும் மறைக்க அரசாங்கம் விரும்பவில்லை" என்று மீண்டும் வலியுறுத்திக் கூறியதோடு "கேட்க-ப்படும் விவரங்களை வெளியிடுவது குறித்து சட்டமா அதிபருடன் கலந்தாலோசித்த பின்னர் இதுபற்றி விளக்கமளிக்கப்படும்" என்றார்.

கடந்த அரசாங்கத்தின் தீர்மானம் முஸ்லிம் சமூகத்துக்குப் பாரிய அநீதி இழைக்க வழிவகுத்ததாக அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறு-ப்பினர்கள் பலரும் குறிப்பிட்டனர்.

சுகாதாரத் திணைக்களத்திற்குள் உத்தியோகபூர்வ உள்ளக விசாரணைகளாவது மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்திய ஹக்கீம் "குறைந்தது துறை ரீதியான விசாரணையாவது நடத்துங்கள். அந்த நபர்கள் தண்டிக்கப்பட வேண்டும்" என்றார். (ஐ-05)

### எலிக்காய்ச்சல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதுவரை ஏறத

தாழ ஆறாயிரம் பேருக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பாதிக்கப்பட்ட சுக-ாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் காய்ச்சல் நோயாளர்களை இனங்காண்பதற்காக சுகாதாரப் பணியாளர்கள் வீடுவீடாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள கால்நடைகளில் இக்கிருமித்தொற்று உள்ளதா என்பதை ஆய்வு செய்வதற்காக கொழும்பிலிருந்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திலிருந்து குழு ஒன்று யாழ் மாவட்ட-த்திற்கு நாளை வருகை தரவுள்ளது - என்றார். (ஐ)

# வவுனியாவில் தொடர்ச்சியாக வாகனப் பற்றறிகள் திருட்டு!

## - இரண்டு சந்தேகநபர்கள் கைது






வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடம் ஒன்றில் வாகனப் பற்றறிகளைத் தொடர்ச்சியாகத் திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ள-னர் என்று நெளுக்குளம் பொலிஸார் தெரிவித் தனர்.

குறித்த வாகனத் தரிப்பிடத்தில் வாகனப் பற்றறிகள் களவாடப்பட்டுள்ளன என்று நெளுக்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கே. திவுல்வெவவின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இரகசிய விசாரணைகளை முன்னெடுத்திருந்-தனர். இதன்போது நான்கு வாகனப் பற்றறிகளுடன் இரண்டு சந்தேகநபர்களைப் பொலிஸார் கைது செய்-துள்ளதுடன், குறித்த குற்றச்செயலுக்குப் பயன்படுத்-தப்பட்டது எனச் சந்தேகிக்கப்படும் ஓட்டோ ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்படும் மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முன னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் கோரவிபத்து மூவர் காயம்






(மட்டக்களப்பு, டிச 17)

மட்டக்களப்பிலிருந்து களுவாஞ்சிகுடி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த நோய் காவு வண்டி அதே திசையில் வந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தில் மோதி மூவர் காயமடைந்த சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் இரு வாகனங்களிலும் பயண-ித்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். நின்று கொண்டிருந்த பேருந்தின் பின்புறம் அதிவே-கமாக அம்புலன்ஸ் மோதியமையால் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது

எனினும் , நோய் காவு வண்டியில் பயணித்த சாரதி உட்பட மூன்று பேர் காயமடைந்து களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நோய் காவு வண்டியில் மட்டக்களப்பு பிர-ாந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இருந்து புறப்பட்டு, களுவாஞ்சிகுடியில் நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றுக்காக சென்றவேளையிலேயே இவ்விபத்து சம்பவித்துள்ளதாக தெரியவருகின்றது.

விபத்தில் நோய் காவு வண்டியின் முன் பகுதிக்கும் பேருந்தின் பின் பகுதியிலும் சேதம் ஏற்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பில் களுவாஞ்சிகுடி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள-னர். (ஐ)

# விபத்தில் குழந்தை உட்பட மூவர் காயம்



(கொழும்பு, டிச 17)

காலி, கத்தளுவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்-தில் குழந்தை உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து இன்று காலை இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிள் ஒன்று தனியார் பஸ் ஒன்றுடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக கப்பட்டுள்ளனர். (ஐ)

# மின் கட்டணத்தை 11 வீதத்தால் குறைக்க முடியும்

(கொழும்பு, டிச 17)

மின் கட்டணத்தை 11 வீதத்தால் குறைக்க முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் மின்னுற்ப-த்திக்காக பயன்படுத்-தப்படும் எரிபொருளின் விலைகளையும் மேலும் குறைக்கமுடியும்என ஆணை-க்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள மாற்று யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை-யால் சமர்ப்பிக்கப்பட்ட மின் கட்டணத் திருத்த யோசனை, பெட்ரோலியக் கூட்டுத்தா-பனத்தால் மின்னுற்பத்திக் காக வழங்கப்படும் எரிபொரு ளுக்கான விலை தொடர்பான அறிக்கை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்த பின்னர் குறித்த மாற்று யோசனை தயாரிக்கப்பட்டுள்ளது.

எனினும் , 2025ஆம் ஆண்டின் முதல் 6 மா-தங்களுக்கு தற்போதுள்ள மின் கட்டணத்தை மாற்றமின்றி நடைமுறைப்படுத்த மின்சார சபை தற்போது முன்மொழிந்-துள்ளது (ஐ)

PUCSL







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.12.2024 இல் வெளியிடப்பெற்றது.